

**தாய் கழுகு குஞ்சை நோக்கி சத்தமிட்டு, "இங்கு வா, நீ கோழிக் குஞ்சு அல்ல. நீ அந்த இடத்துக்குரியவனல்ல, நீ எனக்கு சொந்தமானவன்" என்றது**







**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

உபாகமம் 32ம் அதிகாரம் 11ம் வசனத்தில், “கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின் மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின் மேல் சுமந்து கொண்டு போகிறது போல” என்று நாம் வாசிக்கிறோம்.

கழுகுகளையும் தீர்க்கதரிசிகளையும் பூமிக்குரிய கோழிக் குஞ்சுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அவர்கள் எவ்வளவு உயரப் பறக்கின்றனர் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். கழுகு, தன் குஞ்சுகள் பூமிக்குரிய கோழிக்குஞ்சுகளைப் போல் இருக்கக் கூடாது என்று தீர்மானம் செய்கிறது. அதை அது சாதித்து விடும்! ஒரு கோழிக் குஞ்சு ஸ்தாபனத்திலுள்ள உங்கள் நண்பனாக இருக்கக் கூடும். ஆனால் பரலோக காரியங்களைக் குறித்து அவருக்கு ஒன்றுமே தெரியாது. அவர் அங்கு உயர சென்றதேயில்லை. தானியக் களஞ்சியக் கொல்லைப்புறத்திலுள்ள அந்த கோழிக் குஞ்சுகள் தங்கள் கூடுகளில் உட்கார்ந்து கொண்டு, “தெய்வீக சுகமளித்தல் என்பது கிடையவே கிடையாது, அந்நிய பாஷை பேசுதல் என்பது கிடையவே கிடையாது, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது கிடையவே கிடையாது,” என்று க்ளக் க்ளக் என்று சத்தமிட்டுக் கொண்டிருக்கின்றன. நல்லது, அதற்கு எப்படி தெரியும்? அது இருப்பதைக் கண்டு கொள்ள, அது தானியக் களஞ்சியக் கொல்லைப் புறத்தை விட்டு வெளியே செல்லவேயில்லை. அது தேவனுடைய மகத்தான ஆவிக்குரிய உயரங்களாகிய நீல வானத்துக்கு உயர எழும்பிச் சென்றதேயில்லை.

கழுகைப் போன்று கோழிக் குஞ்சும் ஒரு பறவையே. ஆனால் பரலோக சூழ்நிலையைக் குறித்து கோழிக் குஞ்சுக்கு ஒன்றுமே தெரியாது. கழுகுகளைக்

குறித்து நான் பேசிக் கொண்டிருக்கையில் மேற்கு பாகத்திலுள்ள ஒரு பண்ணையாளர் அடைக்காக வைக்கப்பட்டிருந்த கோழி முட்டைகளுடன் ஒரு கழுகின் முட்டையை வைத்த சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. அவைகள் பொறித்த போது, கழுகுக் குஞ்சு காண்பதற்கு விகாரமாயிருந்தது. மற்ற கோழிக் குஞ்சுகள் சத்தமிட்ட போது, அவை எவைகளைக் குறித்து சத்தமிடுகின்றன என்பதை கழுகுக் குஞ்சு புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவை வித்தியாசமான பாஷையைப் பேசின. நான் என்ன கூறுகிறேன் என்று நீங்கள் புரிந்து கொண்டீர்கள் என்று நம்புகிறேன். கழுகுக் குஞ்சு கோழிக் குஞ்சுகள் செய்வதை கவனித்துக் கொண்டே வந்தது. அதற்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கழுகுக் குஞ்சு வினோதமாயிருந்தபடியால், கோழிக் குஞ்சுகள் அதை கொத்தின.

தாய் கோழி 'க்ளக்' என்று சத்தமிடும் போது கோழிக் குஞ்சுகளும் 'க்ளக்' என்ற சத்தமிட்டன, ஆனால் கழுகுக் குஞ்சுக்கு அந்த 'க்ளக்'கை புரிந்து கொள்ள இயலவில்லை. கோழிக் குஞ்சுகள் தாயிடம் வந்த போது, கழுகுக்குஞ்சு வரவில்லை. ஏனெனில் அந்தவிதமான 'க்ளக்'கைக் குறித்து அது ஒன்றுமே அறிந்திருக்கவில்லை. இதைக் குறித்து நான் அதிகம் கூறப் போவதில்லை. நான் எதைக் குறித்து பேசிக்

கொண்டிருக்கிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

மறுபடியும் பிறந்த உண்மையான தேவனுடைய பிள்ளை உலகத்தின் ஜனங்களைப் போல் நடந்து கொள்வதில்லை. அவர்கள் ஒரு சபையில் சேர்ந்திருப்பதாக கூறிக் கொள்கின்றனர், ஆனால் உங்களால் அந்த 'க்ளக்'கை புரிந்து கொள்ள முடியவில்லை. நீங்கள் கழுகாக பிறந்திருக்கிறீர்கள். தேவன் தமக்குச் சொந்தமானவர்களை அறிந்திருக்கிறார்.

ஒரு நாள் அவைகள் கொல்லைப் புறத்தில் இருந்த போது, தாய் கழுகு அந்த வழியாய் பறந்து வர நேரிட்டது. அது அவ்விதம் பறந்து வந்தபோது, அதன் பெரிய நிழல் கொல்லைப் புறத்தின் மேல் விழுந்தது. அது கீழே பார்த்தபோது, தனக்குச் சொந்தமானதை அது அடையாளம் கண்டு கொண்டது. அது அதைப் பார்த்து 'க்ரீச்' என்று சத்தமிட்டது. அவ்விதம் அது செய்த போது, கழுகுக் குஞ்சு தலையைத் திருப்பி மேல் நோக்கத் தொடங்கினது. **அது மேலே பார்த்த போது, தாய் கழுகு குஞ்சை நோக்கி சத்தமிட்டு, "இங்கு வா, நீ கோழிக் குஞ்சு அல்ல. நீ அந்த இடத்துக்குரியவனல்ல, நீ எனக்கு சொந்தமானவன்" என்றது.**

அந்த கழுகுக் குஞ்சு என்ன செய்வதென்று வியந்தது. ஏனெனில் அதைதான் அது விரும்பினது. ஸ்தாபன கொல்லை புறங்களில் நீண்ட நாட்களாக நடந்து கொண்டிருக்கும் அநேக கழுகுகள் நான் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருக்கக் கூடும். அவர் உங்களை அழைத்து, “நீ எனக்குச் சொந்தமானவன்” என்றுரைப்பார் என்று எண்ணுகிறேன்.

தாய் கழுகு கழுகுக் குஞ்சை நோக்கி, “நீ முதன் முறையாகத் தாவி உன் செட்டைகளை அடி” என்றது. அதுவும் முதன் முறையாகத் தாவி தன் செட்டைகளை அடித்தபோது, அது பூமிக்குரிய பறவை அல்ல என்பதைக் கண்டு கொண்டது. ஏனெனில் அப்பொழுது அது கொல்லைப்புறத்திலுள்ள சற்று உயரமான ஒரு கம்பத்தின் மேல் அமர்ந்திருந்தது. தாய் கழுகு, “மகனே, மற்றும் ஒரு முறை தாவி வா, நான் உன்னை என் செட்டைகளின் மேல் சுமந்து செல்வேன்” என்றது. ஜீவனுள்ள தேவனுடைய சபை செய்ய வேண்டியது என்னவெனில், அது எல்லா ஸ்தாபனக் கொள்கைகளையும், தத்துவங்களையும் விட்டு உயரத் தாவி, அவைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதே. கூட்டைக் கலைக்கும் நேரம் ஏற்கனவே வந்துவிட்டது. நமக்கு இன்னும் ஒரு தாவு அவசியம். நாம் கொல்லைப்புற கம்பம் வரைக்கும் வந்து விட்டோம், ஆனால் நாம் விடுதலையடைந்து

அவருடைய செட்டைகளின் மேலேறி முதன் முறையாகப் பறக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் தேவனுக்கு பிள்ளைகள் உள்ளனர் என்பதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் இயேசு கிறிஸ்துவின் வல்லமையுடன் கூடிய சுவிசேஷத்தைக் கேட்கும் போது, அது அவருடைய சத்தம் என்பதை அவர்கள் அறிந்து கொள்கின்றனர். ஒரு பெரிய ஸ்தாபனத் தலைவரைக் கொண்டவனாய் நான் குனிந்து கீழே பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஒரு நாள் நான் மேலிருந்து வந்த ஒரு சத்தத்தைக் கேட்டேன். அது தலைமை அலுவலகத்திலிருந்தோ, போதகரிடத்திலிருந்தோ, டீகன் குழுவிலிருந்தோ, பேராயரிடத்திலிருந்தோ வந்த சத்தம் அல்ல. நான் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு சத்தத்தைக் கேட்டேன். அது எவ்வளவாக என் இருதயத்தை சிலிர்க்கச் செய்தது!

தொல்லை என்னவெனில், தானியக் களஞ்சியக் கொல்லைப்புறக் கோழிக் குஞ்சுகள், அவை எதற்காக 'க்ளக்' கென்று சத்தமிட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை அறியாமலிருக்கின்றன. அவை கழுகுகள் அல்ல, அவை தேவனுடைய வல்லமையை ஒருபோதும் பரிசோதித்து உணராத தானியக் களஞ்சியக் கொல்லைபுறக் கோழிக் குஞ்சுகளே. அவை ஒருபோதும் தெய்வீக சுகம் பெறவில்லை. அந்த மகத்தான பரிசுத்த ஆவியினால்

ஆசீர்வதிக்கப்படவில்லை அவை ஒருபோதும் ஆவியில் நடனமாடவில்லை. ஆவியால் நிறைந்து அழவில்லை. ஆனால் ஒரு கழுகு இவையனைத்தையும் இதைக் காட்டிலும் அதிகமும் பெற்றுள்ளது. அது உயர எழும்பி எழும்பி பரலோக ஆதிக்கத்துக்குள் செல்கிறது.

*செய்தி: கழுகு தன் கூட்டைக் கலைக்கிறது போல*

★★★★★